# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 919

இல. 20, வாட் இடம்,
கொழும்பு 7

15, ஜனவரி 2010

பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள்
வளாகங்களின் தலைவர்கள்
நிறுவகங்களின் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழகங்கள் அல்லது உயர் கல்வி நிறுவகங்களில் (உகநி) பகிடிவதையின் கெடுதியினைத் தடுப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டிய வழிகாட்டிகள்**

விசேடமாக மாணவர்களிடையே நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும் வளர்ப்பதற்காக நினைவுக்கெட்டாத காலத்தில் இருந்து உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழக முறைமையில் பகிடிவதை தொடர்ந்திருக்கிறது. இதற்கு மாறாக, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மிகவும் ஆபத்தான, கடுமையான மனோரீதியான மற்றும் உடல்ரீதியான இம்சைகளை பகிடிவதை ஏற்படுத்தியுள்ளதுடன் கடந்த காலங்களில் இதன் விளைவாக நிரந்தர உடல்ரீதியானதுடன் / அல்லது மனரீதியானதுமான குறைபாடுகளை அல்லது மாறாக சில மாணவர்களுக்கு மரணத்தை உண்டு பண்ணியுள்ளது. இதற்கு மேலதிகமாக, மிகவும் கண்டுகொள்ளக்கூடிய அதிசய சம்பவம் யாதெனில், அநேகமான சம்பவங்களில் பகிடிவதையானது, சில தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் அல்லது வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களை இம்சைப்படுத்தும் அல்லது புதிய மாணவர்களின் புத்தியில் வெவ்வேறான அரசியல் கருத்துக்களை ஊட்டும் உத்தேசம் கொண்டதாகும். மொத்தமாக, பகிடிவதையினை ஊக்கமளித்தோரால் முன்வைக்கப்பட்ட சமூகமயமாக்கல் அல்லது இயற்கைமயமாக்கல் ஆகிய உரிமை கொண்டாடலுக்கு, கெட்ட விளைவுகள் குறிப்பாக உயிரை அச்சுறுத்தும் நிகழ்வுகள் நீண்ட தூரத்துக்கு அத்துமீறிவிட்டன. பகிடிவதையுடன் தொடர்புபட்ட இடம்பெற்ற சம்பவங்களின் கடுமையான இயல்பு காரணமாகவும், உயர் கல்வி நிறுவனங்களுக்கு புதிய மாணவர்களைப் பதிவு செய்யும் காலப்பகுதியில் பகிடிவதையின் உயர்வான சம்பவித்தல் தொடர்புடைய முறைப்பாடுகள் செய்யப்பட்டதனாலும், 1998ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையும் வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம் என்ற தலைப்பின் கீழ் ஒரு புதிய சட்டம் 1998இல் உருவாக்கப்பட்டது. குறிப்பிட்ட சட்டத்தின் விதிகளின் கீழ் பகிடிவதை என்பது ஒரு கல்வி நிறுவனத்தினது ஒரு மாணவனை அல்லது பணியாட்டொகுதியின் ஒரு அங்கத்தவரை உடல்ரீதியாக அல்லது உளவியல்ரீதியாக காயம் அல்லது மனநோவு அல்லது பயம் என்பவற்றை உண்டாக்கும் அல்லது உண்டாக்கக்கூடிய ஏதாவதொரு நடவடிக்கை.

**பகிடிவதையின் வகைகள்**

கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே பகிடிவதை புரிகின்ற அல்லது அதில் பங்கு பற்றுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாதல் வேண்டும்.

(அ) பகிடிவதை புரிகையில் எவரேனும் மாணவருக்கு அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவருக்கு பாலியல் தொந்தரவை அல்லது பாரதூரமான காயத்தினை ஏற்படுத்தல்.

(ஆ) கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் உடலுக்கு, நற்பெயருக்கு அல்லது ஆதனத்துக்கு அல்லது பலியானவர் வேறு எந்தவொரு ஆளில் அக்கறையுடையவராக இருக்கின்றாரோ அந்த ஆளின் உடலுக்கு, நற்பெயருக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறு விளைவிப்பதாக பலியானவரை அச்சத்துக்கு உட்படுத்தும் எண்ணத்துடன் அல்லது பலியானவர் எந்தச் செயலைச் செய்யுமாறு சட்டப்படி தேவைப்படவில்லையோ அந்தச் செயல் எதனையும் செய்யுமாறு அல்லது எந்தச் செயலைச் செய்வதற்கு பலியானவர் உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்யாது விடுமாறு வற்புறுத்தும் எண்ணத்துடன் வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அச்சுறுத்தல்.

(இ) எந்தச் செயலின் மூலம் கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரின் அல்லது வேறு ஆளின் சொந்தச் சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் அத்தகைய கல்வி நிறுவனத்திற்குள்ளாக அல்லது அத்தகைய கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கீழும் கட்டுப்பாட்டின் கீழுமுள்ள எவையேனும் வளவுகளுக்குள்ளாக சட்ட முறையான நியாயப்படுத்துதல் இல்லாமலும் அத்தகைய மாணவரை, பணியாட்டொகுதி உறுப்பினரை அல்லது வேறு ஆளை குறிப்பிட்டவொரு செயல்நெறிமுறையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தும் நோக்கத்திற்காகவும் தடைசெய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனும் ஆள்.

(ஈ) கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரை, அத்தகைய மாணவர் அல்லது உறுப்பினர் எந்தச் திசையை நோக்கிச் செல்வதற்கு உரிமை கொண்டுள்ளாரோ அந்தத் திசையில் செல்வதைத் தடை செய்கின்றவாறான அத்தகைய முறையில் சட்டவிரோதமாகத் தடுக்கின்ற எவரேனும் ஆள்.

(உ) கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவரை குறித்த சில சுற்றுவட்ட எல்லைகளுக்கும் அப்பால் செல்வதை தடை செய்யக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரை சட்டவிரோதமாக மறித்து வைக்கின்ற எவரேனும் ஆள்.

(ஊ) கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் வளவுகளை சட்டபூர்வமான காரணமின்றி, வலோத்காரமாக இருப்பாட்சி கொள்ளுகின்ற எவரேனும் ஆள்.

(எ) கல்வி நிறுவனடிமான்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் சொத்தழிவு செய்கின்ற எவரேனும் ஆள்.

எவ்வாறாயினும், புதிய மாணவர்களுக்கு அதிக பாதிப்பினையும் பொது மக்களின் ஆட்சேபனையினையும் உண்டு பண்ணும் பகிடிவதையினைத் தடுப்பதற்கு கடந்த தசாப்த காலத்தில் பல்கலைக்கழகங்களால் / உயர் கல்வி நிறுவனங்களால் மேற்படி சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன முறையாக பிரயோகிக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

1998ல் மேற்படி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அண்மைய கடந்த காலத்தில் சகல பல்கலைக்கழகங்களிலும் / உயர் கல்வி நிறுவனங்களிலும் பல வகையான பகிடிவதைச் சம்பவங்களின் ஆபத்தான அதிகரிப்புகள் அறிக்கையிடப்பட்டும் அவதானிக்கப்பட்டும் உள்ள காரணத்தால் மேற்படி சட்டத்தில் உள்ள பிரமாணங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தலை உதவும் நோக்கத்துடன் பின்வரும் வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக, நிறுவனங்கள் அதனதற்கு பொருத்தமாக கையாளப்படும் உபாயங்களுக்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்களும் / நிறுவனங்களும் பின்வரும் தவிர், செய், தண்டி ஆகிய நடவடிக்கைகளை மூன்று கட்டங்களில் கையாள்வதற்கு இத்தால் வேண்டப்படுகின்றன.

## 1. தவிர்

1.1 உயர் கல்வி நிறுவனங்களில் தங்களது பதிவுக்காலத்தில் உயர் கல்வி நிறுவனத்தினது பிரதேசத்தின் உள்ளே அல்லது வெளியே அந்த வகையான பகிடிவதையினையோ அல்லது வன்செயலினையோ அவர்கள் ஆரம்பித்தல், உதவுதல், தூண்டுதல், செய்தல் இல்லையென குறிப்பிட்டு ஒரு பிரகடனத்தில் (இணைப்பு 1ல் மாதிரிப்படிவம் தரப்பட்டுள்ளது) மாணவர்கள் கட்டாயமாக கையெழுத்திடுவதுடன் பெற்றோரால் / பாதுகாவலரால் உறுதிக் கையெழுத்திடப்படல் வேண்டும்.

1.2 சகல பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் உபவேந்தர் மற்றும் / அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரு பேரவை உறுப்பினர், புறொக்ரர் இருப்பின், பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி, மாணவ ஆலோசகர்கள், உதவி விடுதிப் பொறுப்பாளர் ஆகியோரை உள்ளடக்கியதும், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / உதவிப் பதிவாளர் (மாணவர் நலன்கள்) அவர்களையும் இணைப்பாளராக கொண்ட பகிடிவதைக்கு எதிரான குழுவொன்றை நியமித்தல். இக்குழு தயார்படுத்தல் மற்றும் உச்ச கால மாதத்தில் இரு தடவையில் கூடுவதுடன், பேரவைக்கு ஒழுங்காக அறிக்கையிடல் வேண்டும்.

தனிப்பட்ட பல்கலைக்கழகங்களின் / உயர் கல்வி நிறுவனங்களின் தேவைக்கேற்ப பீட மட்டத்தில் பகிடிவதைக்கு எதிரான குழுக்களை ஸ்தாபிப்பதற்கு பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றன.

1.3 பகிடிவதை எனக் கருதப்படும் செயல்களையும், அத்துடன் இச்சட்டத்தின் பிரமாணங்களின் கீழ் வழங்கப்படும் தண்டனைகளையும் விபரிக்கும் கையேடு ஒன்றைத் தயாரிக்கவும்.

1.4 20 - 25 மாணவர்களுக்கு மேற்படாத எண்ணிக்கைக்கு ஒரு தற்காலிக மாணவ ஆலோசகர் (TSC) என்ற அடிப்படையில் தற்காலிக மாணவ ஆலோசகர்களாக குறைந்தது மூன்று மாதம் அல்லது மேற்பட்ட காலத்திற்கு கல்வி சார் பணியாட்களான சிரேஷ்ட விரிவுரையாளர் அல்லது மேற்பட்ட தரத்தில் இருந்து நியமித்தல் வேண்டும்.

1.5 சட்டத்தில் உள்ள பிரமாணங்கள் உட்பட பகிடிவதையின் சகல விடயங்களையும் எல்லாத் துறைத் தலைவர்களுக்கும் மற்றும் பொறுப்பான பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவு புகட்டப்படல் வேண்டும்.

1.6 பகிடிவதை தொடர்பாக எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளின் விளம்பரங்கள் வாசிகசாலைகள், மாணவர் சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தொடர்புள்ள விளம்பரப் பலகைகள் போன்ற கவனத்தை ஈர்க்கும் இடங்களில் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

1.7 தடுப்பு நடவடிக்கைகள் மீதான விவரமான தகவல்கள் சகல பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1.8 சட்டத்தினது முக்கிய பகுதிகள் பற்றி சகல பெற்றோர்களுக்கும் புதிதாக நுழைபவர்களுக்கும் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.

1.9 பகிடிவதையின் பலன்களைப் பற்றி சிரேஷ்ட மாணவர்களுக்கு அறிவூட்டப்படல் வேண்டும்.

1.10 சிரேஷ்ட மாணவர்கள் விடுமுறையில் இருக்கும் போது புதிய மாணவர்களை அனுமதித்தல்.

1.11 எந்த வகையான பகிடிவதைக்கும் உட்பட்டால் பின்பற்றப்பட வேண்டிய காரியக் கிரமம் மற்றும் முக்கியமான இருப்பிடங்கள் மீதான அவர்களை அறிவூட்டுவதற்காக, புதிய மாணவர்களுக்கான மாறுபட்ட சூழ்நிலைக்கான பயிற்சி / பரிச்சயமாக்குதல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை நடாத்துதல்.

1.12 உயர் கல்வி நிறுவனங்களினது உடனடி சுற்றுப்புறத்தில் மற்றும் 24 மணி நேரமும் விழிப்பான நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதற்காக வேலை நேரத்தின் பின்பு அல்லது வார இறுதி நாட்களில் சமூகமளிப்பதற்கு சகல தொடர்புடைய அலுவலர்களும் உற்சாகப்படுத்தல் வேண்டும்.

1.13 பகிடிவதை இடம்பெறக்கூடிய இடங்கள் மற்றும் காலப்பகுதி என்பவற்றை உள்ளூர் காவல்துறையினருக்கு தொடர்ந்து அறியத் தரவும்.

1.14 பகிடிவதையினைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி பொதுசன ஊடகங்களுக்கு தொடர்ந்து அறியத்தரவும்.

1.15 பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தினுள் நீண்ட மணித்தியாலங்களுக்கு விருப்பத்தின் பேரில் அல்லது சுழற்சி முறை அடிப்படையில் மாணவர் ஆலோசகர்களும் உதவி விடுதிப் பொறுப்பாளர்களும் சமூகமளித்திருக்க உற்சாகப்படுத்தவும்.

1.16 பல்கலைக்கழக சுற்றாடல் மற்றும் கலாச்சாரத்துடன் பரிச்சயமாகிக் கொள்வதற்கு புதிய மாணவர்களுக்கான ஒரு பாதுகாப்பான மற்றும் மாணவர் நட்புச் சுற்றாடலினை வழங்கக்கூடிய புதுமையான பல்கலைக்கழகம் குறித்த நிகழ்ச்சித் திட்டம் அல்லது செயல்களை ஆரம்பித்தல்.

## 2. பகிடிவதையின் நிகழ்வின் போது பின்பற்ற வேண்டிய காரியக்கிரமம்

2.1 பகிடிவதை தொடர்பான சகல முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படுவதுடன் திறந்த முறைப்பாடுகள் அல்லது தேவைப்படின் 'இரகசியமான' அடிப்படையின் கீழ் புகார் செய்வதற்கு வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.

2.2 எழுத்து மூலமான முறைப்பாடுகள், ஸ்தூல சாட்சியங்கள், காயங்கள், சாட்சியங்கள், சூழ்நிலையில் இருந்து அனுமானிக்கப் பெறல். நாடாப் பதிவு செய்யப்பட்ட (Audio) மற்றும் புகைப்படங்கள் (Video), போன்ற சாத்தியமானளவு அதிகமான சாட்சியங்களை சமர்ப்பிக்க ஊக்குவித்தல்.

2.3 1998ன் 20ம் இலக்க பகிடிவதை சட்டத்தின் கீழ் பின்பற்றப்பட வேண்டிய சம்பந்தமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு சகல வழக்குகளும் புகார் செய்யப்படல் வேண்டும்.

2.4 மருத்துவ அல்லது மனநோய் மருத்துவ பரிசோதனை ஆலோசனை பெறல் மற்றும் தேவைப்படின் மருத்துவ அறிக்கைகள் கோரல்.

2.5 ஆபத்தான காயங்கள் அல்லது தண்டனைக்குரிய சட்டத் தொகுப்பில் மற்றும் சித்திரவதைக்கு எதிரான மரபொமுங்கில் குறிப்பிடப்பட்டவாறான தண்டனைக்குரிய செயல்கள் மற்றும் 1994ன் 22 இலக்க தண்டனைச் சட்டத்தின் ஏனைய கொடுமையான, மனிதத் தன்மையற்ற அல்லது தரக்குறைவாக நடாத்தல் என்பனவாக இருந்தால், பொலிசில் புகார் செய்தல் வேண்டும்.

2.6 பகிடிவதையின் விளைவாக பல்கலைக்கழகத்துக்கு அல்லது பொதுச் சொத்துக்கு ஏற்பட்ட சேதங்களின் விபரங்கள் பெறப்படல்.

2.7 1998ன் 20ம் இலக்க பகிடிவதையினை தடைசெய்தல் சட்டத்தினில் குறிப்பிடப்பட்டுள்ள காரியக் கிரமங்களை பின் தொடர்தல்.

2.8 புதிய மாணவர்களைப் பதிவு செய்து முதல் மூன்று காலப்பகுதியில் ஒவ்வொரு கிழமை அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குமுவுக்கு, பகிடிவதையின் சகல சம்பவங்களையும் 1998ன் 20ம் இலக்க பகிடிவதையினை தடை செய்தல் சட்டத்தின் அடிப்படையின் மேல் வழங்கப்பட்ட தண்டனைகளையும் அறிவித்தல்.

## 3. தண்டனை

மேற்படி சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட அனேகமான குற்றங்கள் ஐமீனில் / பிணையில் விடத்தகாதவை என்பதுடன், பத்து வருடங்கள் வரையிலான கடுமையான சிறைவாசகத்துக்கான சட்டக் கட்டுப்பாட்டுக்கு உள்ளானது என அழுத்திக் கூறப்படுகிறது. மேலும் மேற்படி சட்டத்தின் நிபந்தனையின் கீழ் ஒரு மாணவன் குற்றவாளியாகக் காணப்படின் நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முடியும் என்பதுடன், மேலும் சொத்துக்களுக்கு ஏதாவது சேதம், பாதிக்கப்பட்டவருக்கு உண்டாக்கப்பட்ட காயங்களுக்கு நஷ்டஈடு செலுத்துவதற்கு பொறுப்புள்ளவராவர்.

பேராசிரியர் காமினி சமரநாயக்க
தலைவர்

பிரதிகள்:
1. தலைவரின் காரியாலயம் / பமாஆ
2. உதவி – தலைவர் / பமாஆ
3. பமாவினது அங்கத்தினர்கள்
4. செயலாளர் / பமாஆ
5. பீடங்களின் பீடாதிபதிகள்
6. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
7. நிதிப் பொறுப்பாளர்
8. பல்கலைக்கழகங்களின் நிதியாளர்கள்
9. உயர் கல்வி நிறுவனங்களின் / நிறுவனங்களின் நூலகர்கள் / சிஉநு / உநூ
10. வளாகங்கள் / நிறுவகங்களின் பிரதி நிதியாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்
11. வளாகங்கள் / நிறுவகங்களின் பிரதி நிதியாளர்கள் / சிரேஷ்ட உதவி நிதியாளர்கள் / உதவி நிதியாளர்கள்
12. பிரதம உள்ளக கணக்காய்வாளர்
13. பல்கலைக்கழகங்களின் அரச கணக்காய்வு மேற்பார்வையாளர்கள்
14. உயர் கல்வி நிறுவனங்களின் சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காளர் / உதவி உள்ளக கணக்காளர்கள்
15. வர்த்தக சங்கங்களின் செயலாளர்கள்
16. கணக்காய்வாளர் நாயகம்

UGC/L/749

**பிரகடனத்தின் மாதிரிப்படிவம்** **இணைப்பு 1**

பரீட்சார்த்தி அல்லது மாணவரால் பிரகடனம்

1. ........................................................................................ ஆகிய நான் 1998ம் ஆண்டின் 20ம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையும் வேறு வடிவிலான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள பகிடிவதையினை தடை செய்தல் சட்டம் மற்றும் 2010 ஜனவரி 15ம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை இல: .................... ஆகியனவற்றை கவனமாக வாசித்து பூரணமாக விளங்கிக் கொண்டேன்.
2. நான் இத்தால் விளங்கிக் கொள்வது யாதெனில்
   பகிடிவதை எனும் வரைவிலக்கணத்தின் கீழ் வரும் எந்த நடத்தைக்கும் செயலுக்கும் இடம் கொடுக்க மாட்டேன்.
   எந்த வகையான பகிடிவகையிலும் பங்கு பற்றவோ அல்லது தூண்டவோ அல்லது இன்னொரு தலைமுறைக்கு கொண்டு செல்லவோ மாட்டேன்.
   எவரையேனும் உடல்ரீதியாகவோ மனோரீதியாகவோ புண்படுத்தவோ அல்லது வேறுவகையான தீங்கு உண்டு பண்ணவோ மாட்டேன்.
3. ஏதேனும் ஒரு வடிவிலான பகிடிவதையினதும் குற்றவாளியாக காணப்பட்டால், அமுலாக்கப்பட்ட சட்டத்தின் படியும் பல்கலைக்கழகத்தின் உபவிதிகளின்படியும் நான் தண்டிக்கப்படலாம் என்பதற்கு சம்மதிக்கிறேன்.

.................ஆம் ஆண்டின் ................. மாதத்தின் ...........நாளன்று இது கையெழுத்திடப்பட்டது.

.........................................

மாணவனின் கையொப்பம்

பெயர்: ...............................................................................................

அனுமதி இலக்கம்: ..............................................................................

விலாசம்: ..............................................................................

..............................................................................

..............................................................................

**பெற்றோர் / பாதுகாவலரால் உத்தரவாதமளித்தல்**

1. ........................................................................................ ஆகிய நான் 1998ம் ஆண்டின் 20ம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையும் வேறு வடிவிலான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள பகிடிவதையினை தடை செய்தல் சட்டம் மற்றும் 2010 ஜனவரி 15ம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை இல: .................... ஆகியனவற்றை கவனமாக வாசித்து பூரணமாக விளங்கிக் கொண்டேன்.

2. எனது மகன் / மகள் / காக்கப்படுபவர் எந்த வடிவிலான பகிடிவதைக்கும் இடம் கொடுக்க மாட்டார் என நான் உங்களுக்கு நிச்சயப்படுத்துகிறேன்.

3. ஏதேனும் ஒரு வடிவிலான பகிடிவதையினதும் குற்றவாளியாக அவர் காணப்பட்டால், அமுலாக்கப்பட்ட சட்டத்தின் படியும், பல்கலைக்கழகத்தின் உப விதிகளின் படியும் அவர் தண்டிக்கப்படலாம் என்பதற்கு சம்மதிக்கிறேன்.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்: ........................................

பெயர்: ...............................................................................................

மாணவனுடனான உறவு முறை: ..............................................................

விலாசம்: ..............................................................................

..............................................................................

..............................................................................